ISSN:2582-9599



# சங்க இலக்கியத்தில் பொருளியல் சிந்தனைகள்

**ந.சரண்யா**
**உதவிப்பேராசிரியர்**
**காமராஜர் கல்லூரி, தூத்துக்குடி-2**

**ஆய்வுநோக்கம்**

பொருளியல் என்பது ஒரு சமூக அறிவியல். இது மனித விருப்பங்களைப் பற்றியும் அவை நிறைவு செய்யப்படுவது பற்றியும் ஆராய்கிறது. மக்கள் எவ்வாறு வருவாயை ஈட்டிச் செலவு செய்கிறார்கள் என்பது பற்றிக் குறிப்பிடுகின்றது. அவர்கள் வாழ்க்கையை நடத்த எவ்வித முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பது பற்றியும் பொருளியல் குறிப்பிடுகின்றது. பல்வேறு பயன்பாடுகளை உடைய பற்றாக்குறையான வளங்களைப் பயன்படுத்திச் சமுதாயம் நிகழ்கால மற்றும் எதிர்கால் நுகர்விற்காகப் பொருட்களை உற்பத்தி செய்கிறது என்பதைப் பற்றிப் பொருளாதாரம் ஆய்வு செய்கிறது.

**பொருளியல் சொல் விளக்கம்**

பொருளியல் எனும் தமிழ்ச்சொல் கிரேக்கச் சொல்லான ஆய்கோனாமியா எனும் சொல்லிலிருந்து உருவானது. ஆய்கோனோமியா எனும் சொல்லிலிருந்து ஆங்கிலச் சொல்லான 'இகனாமிக்ஸ்' எனும் சொல் தோன்றியது. இச்சொல்லின் பொருளைத் தமிழில் 'பொருளியல்' என்கிறோம். கிரேக்க மொழியில் ஆய்கோனோமியா என்னும் சொல் 'வீட்டு நிர்வாகம்' என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

**நிலவியலும் பொருளியலும்**

சங்ககாலம் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலம் தங்களின் பொருளாதாரக் தேவைக்காக இயற்கையை மாற்றியமைத்துக் கொண்டும் வாழ்ந்தனர். பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிலம் அடிப்படைக் காரணியாக அமைகிறது. "இடத்தோடும் காலத்தோடும் தொடர்புபடுத்தும் போது தான் எந்த ஒரு கொள்கையும் சரியானது என்பதை உறுதிப்படுத்த முடியும்" என்பார் நா.பாலுசாமி. நிலம் என்பது பல்வேறு கூறுகள் அடங்கிய நிலவியலாகக் குறிப்பிடப்படுகிறது. "நாட்டுப்பிரிவுகள், தட்பவெப்பநிலை, உற்பத்திப் பொருள்கள், மக்கள் தொகை முதலான எல்லாம் நிலவியலில் அடக்கப்படுகின்றன." என்பார் மு.தங்கராசு சங்க காலம் ஐந்நில அமைப்பைப் பெற்றிருக்கிறது. நீராதாரத்தை அமைத்துக் கொடுத்து, மக்களின் பொருளியல் வாழ்வுக்கு உறுதுணையாக அமைந்திருந்ததனைக் காண முடிகிறது.

**குறிஞ்சி நில மக்களின் பொருளியல் வாழ்க்கை**

மலைகளும் குன்றுகளும் அதனை ஒட்டிய பகுதியுமே குறிஞ்சி நிலமாகும். மலைகள் நெருக்கமாக வேலிபோல் முள்ளமைந்து அடர்ந்திருக்கும். இதனை "முந்தூழ் வேலியமலை" (குறுந். 239

KAMARAJ COLLEGE
Accredited with A+ Grade by NAAC
இந்து சமுதாய நலச்சங்கங்களால் 1966–ல் தொடங்கப்பட்ட கல்லூரி
(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)
THOOTHUKUDI - 628003

: 7) என்றும், இம்மலை நிலத்தைக் காட்டிலும் பெரியது; வானுலகத்தைக் காட்டிலும் உயர்ந்து தோற்றமளிக்கக் கூடியது "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று" (குறுந்.3:1) என்றும், இச்சிறப்புப் பெற்றக் குறிஞ்சி நிலத்தின் மண்ணானது செம்மண் நிறத்தில் சரளை மண்ணாகவும், பாறை மண்ணாகவும் உள்ளது. அவை மழை பொழியும் காலங்களில் செம்மண் கலந்து "செம்புல பெயல் நீர் போல" (குறுந். 40 : 4) ஓடிக் காட்சியளித்து, சங்க இலக்கியங்கள் செழிப்பான இயற்கை வளம் நிறைந்த பகுதியாகக் குறிஞ்சி நிலம் அமைவதைக் காட்டுகின்றன.

**குறிஞ்சி நிலத்திற்குரிய மக்கள் வாழ்க்கையும் தொழிலும்**

நிலத்தின் சாயலோடு மக்களைக் காணும் போது மக்கள் இருவகையில் வாழ்ந்துள்ளனர். அவை 1 நிலத்தில் வாழ்பவர். 2. நிலத்தொழில் மேற்கொண்டு வாழ்பவர் இதனைப்,

"பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய
திணைதொறும் மரீஇய திணை நிலைப் பெயரே"

என்று கூறுகிறது தொல்காப்பியம். தொல்குடியினர் தங்களது வாழ்க்கையை முதன் முதலில் தொடங்கியது மலையும், காடுமான குறிஞ்சி நிலமாதலால் அந்நிலத்தில் ஆண்களும் பெண்களும் ஒத்தத் தன்மையில் வேட்டைத் தொழிலையும், காவல் தொழிலையும் ஒன்றிணைந்து மேற்கொண்டனர். "தமிழ்ச் சமூகத்தின் முதல் விவசாயி பெண்தான் என்பதும், இப்பெண்கள் பயன்படுததிய 'தோண்டுகழி' முதல் விவசாயக் கருவியாகும். அதுவே திணைப்புனக் காவல் ஆயுதமாகப் பின்னர் சூலாயுதமாக மாறியது."இதன் மூலம் தொழில் தொடக்கத்திற்கு முன்னோடியாகத் இருந்தவர்கள் பெண்களே, என்பதை அறிய முடிகிறது.

**பகுத்துண்ணும் பண்பு**

குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடிப் பெற்ற இறைச்சிப் பொருள்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வர். கானவர் வில்லால் வேட்டையாடிக் கொணர்ந்த ஆண் பன்றியை மனையில் உள்ள மகளிர் துண்டித்து ஊரிடத்து வாழ்வோரது குடிமுறைக்கேற்பப் பகுத்தளித்ததை,

"............................. கானவன்
வில்லிற் றந்தவெண்கோட் டேற்றைப்
புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டிக்
குடிமுறை பகுக்கு நெடுமலை நாடு" (நற். 336 : 3-6)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. இங்கு 'குடிமுறை பகுக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் குழுவாக வேட்டையாடிய இறைச்சியை ஒரு குடிக்குள் பகுத்துக் கொண்டதை அறிய முடிகிறது.

**பண்டமாற்று முறை**

குறிஞ்சி நில மக்கள் மலையில் கிடைக்கக் கூடிய பொருட்களையும், வேட்டையாடிக் கிடைத்த உணவுப் பொருட்களையும் கொடுத்து, தங்கள் நிலத்தில கிடைக்கப் பெறாத, பிறநிலத்தில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களைத் தேவைக்கேற்பப் பண்டமாற்றாகப் பெற்றுள்ளனர்.

"செங்கோட் டாமா னூனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு

பொன்னுடை நியமித்துப் பழிநொடை கொடுக்கும்" (பதிற்று.30:10-12)

என ஆமாவின் இறைச்சியையும், யானையின் கோட்டையும் கொடுத்து, அதற்கு ஈடாகப் பொன்னையும் கள்ளையும் பண்டமாற்றாகப் பெற்றதை அறிய முடிகிறது.

**முல்லை நில மக்களின் பொருளியல் வாழ்க்கை**

தமிழ்மரபு ஐந்து வகையான நிலத்தோற்றங்களைக் கொண்டுள்ளது. இதில் முல்லையும் ஒரு நிலமாகும். இதனைக் காடும் காடு சார்ந்த பகுதி என்றழைத்தனர். தொல்காப்பியம் இதனைக் காடும் காடு சார்ந்த பகுதி என்கிறது.

**முல்லை நில மக்களின் வாழ்க்கை**

முல்லை வாழ்வு இனக்குழு வாழ்க்கையான அடித்துண்ணும் பழக்கத்திலிருந்து மாற்றி உயிரினங்களைப் பாதுகாக்கும் நிலைக்கு மாறிய வாழ்வாகும். "முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்களைக் கோவலர், இடையர், ஆயர், பொதுவர்,இடைத்தியர் கோவித்தியர், ஆய்த்தியர், பொதுவியர் எனக் குலப்பெயர் கொண்டும், அண்ணல், தோன்றல், குறும் பொறை நாடன், மனையோள் என உரிப்பொருள் கொண்டும் பெயரிட்டழைத்தனர்"என்கிறார் நச்சினார்கினியர். "உணவு சேகரிக்கும் கட்டத்திலிருந்து அதற்கு அடுத்த கட்ட நிலையாகத் தோன்றிய வேளாண் சமூக அமைப்பில் குடும்பமே பொருளாதார அலகாக உள்ளது. நிலத்தைப் பண்படுத்துகிற கடினமான பணியை ஆடவன் செய்ய, பெண் விதை விதைத்தல், நாற்றுநடுதல் அறுவடை செய்தல் ஆகிய பணிகளைச் செய்கிறாள். படையெடுத்து வருபவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் தங்களுடைய சேமிப்புக் குவியலைப் பாதுகாப்பதற்கும் தனித்தனிக் குடும்பங்கள் கட்டுக் கோப்பான குடியிருப்புப் பகுதிகளில் அடுத்தடுத்து ஒன்றாக வாழ்கின்றன" என்பர் ஸ்டீபன் ப்யூக்ஸ். இவ்வாறு முல்லை நில மக்கள் பிற பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு தங்களது பொருளாதாரத் தேவையை நிறைவு செய்து கொண்டதை அறிய முடிகிறது.

**மருத நில மக்களின் பொருளியல் வாழ்க்கை**

உணவு உற்பத்திக்கு அடிப்படை ஆதாரமாக விளங்கக் கூடிய செழிப்பு நிறைந்த நிலம் மருதமாகும். இது சாகுபடிக்கு ஏற்ற வன்புலம், மென்புலம் இரண்டும் கொண்ட நிலப்பகுதியாகும நச்சினார்கினியர் மருத நில மக்களுக்குரிய மக்களை வரையறுக்கும் போது களமர், உழவர், கடையர், உழத்தியர், கடைச்சியர் என்று குலப்பெயராகவும், மகிழ்நன், ஊரன், மனையோள் என்பன உரிப்பொருட்குரிய தலைமக்கட் பெயராகவும் பட்டியலிட்டுக் காட்டுகிறார். மருத நிலத்தில் நன் செய் வேளாண்மையின்றிக் கள்விற்றல், பூவிற்றல் முதலிய நிலம் சார் தொழில்களும் தச்சுத்தொழில், நெசவுத்தொழில் கைவினைத் தொழில், மட்பாண்டத் தொழில், மற்றும் சிறு சிறு தொழில்களிலும் மருத நில மக்கள் ஈடுபட்டு தங்கள் பொருளியல் தேவையை நிவர்த்தி செய்து கொண்டதை அறிய முடிகிறது. பெரிய நகரங்களில் வணிகம் சிறப்புற நடைப்பெற்று வந்துள்ளதை அறிய முடிகிறது.

'பழம் பல் நெல்லின் ஊனூர்" (அகம் -220 : 13)

"சீர் சான்ற உயர் நெல்லி
னூர் கொண்ட உயர் கொற்றவ" (மதுரை: 87 – 88)

என்று, ஊர்களும், வீடுகளும் நெல்லின் வளத்தால் மதிப்படையும் தன்மையைக் காண முடிகிறது.

**நெய்தல் நில மக்களின் பொருளியல் வாழ்க்கை**

தொல்காப்பியர் நெய்தல் நிலத்தைப் 'பெருமணல் உலகம்' என்று கடற்கரைச் சார்ந்த பண்பாட்டைக் குறிப்பிடுகின்றார். நெய்தல் திணைக்குரிய மக்கட் பெயரை நச்சினார்கினியர் நுளையர், திமிலர், பரதவர், நுளைத்தியர், பரத்தியர் என்று குலப்பெயராகவும், துறைவன் சேர்ப்பன், புலம்பன் என்று குறிப்பிடுகிறார்.

பொருளாதாரம், குடும்ப வாழ்வின் தேவைக்காகவும் உணவு ஈட்டுதல் தன்மையில் கடலில் கிடைக்கும் வளங்களை வாழ்க்கையோடு ஓட்டிய தொழிலுக்கும் பயன்படுத்திக் கொண்டனர். இதில் கடலுக்குச் சென்று மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்தெடுத்தல், சங்கெடுத்தல் மீனினை விற்றுப் பண்டமாற்றுச் செய்தல் போன்ற தொழில்கள் கடல் வாழ்வை ஒட்டிய தொழில்களாக இருப்பதைக் காண முடிகிறது மீன் பிடித்தல் தொழில் பரதவர்களிடத்தில் பகல், இரவு என இரண்டு நிலைகளிலும் நிகழ்ந்தது. இரவு நேரங்களில் மீன் பிடிக்கப் போகும் போது, தங்க வேண்டிய சூழலும் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு தங்கி மீன் பிடிக்கும் போது, சேயிறா எனும் மீனினைப் பிடித்து வந்துள்ளதைப்,

"பெருங்கடற் பரப்பில் சேயிறா நடுங்க
கொடுந்த தொழில் முகந்த செய்கோல் அவ்வலை
நெடுந்த திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு" (அகம்.60 : 1-3)

எனும் பாடலினால் அறிய முடிகிறது.

மீன் பிடித்தல் தொழில் பரதவர்களிடத்தில் பகல், இரவு என இரண்டு நிலைகளிலும் நிகழ்ந்தது. இரவு நேரங்களில் மீன் பிடிக்கப் போகும் போது, தங்க வேண்டிய சூழலும் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு தங்கி மீன் பிடிக்கும் போது, சேயிறா எனும் மீனினைப் பிடித்து வந்துள்ளதைப்,

"பெருங்கடற் பரப்பில் சேயிறா நடுங்க
கொடுந்த தொழில் முகந்த செய்கோல் அவ்வலை
நெடுந்த திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு" (அகம்.60 : 1-3)

எனும் பாடலினால் அறிய முடிகிறது.

**பாலை நில மக்களின் பொருளியல் வாழ்க்கை முறை**

பாலை நிலம் மலையும் காடும் சார்ந்த பகுதிகள் கோடைகாலத்தில் வறட்சியற்று மக்கள் போக்குவரத்துக்கேற்ற நிலமில்லாமையால் இவற்றைச் சுரம் என்றும் பாலை என்றும் அழைத்தனர்.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

இவ்வாறு முல்லை , குறிஞ்சி ஆகிய நிலங்கள் நீண்ட காலம் மழை பொழியாமல் காய்ந்து போய் இருப்பின் அது பாலை நிலமாக மாறும் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதைக் காண முடிகிறது . வலிய வில்லைக் கையிலேந்தித் திரியும் ஆறலைக் கள்வர்கள் பாலை நிலத்தில் மழையின்மையால் வறட்சியின் பொருட்டு வழிச் செல்லும் வணிகர் கூட்டத்தை வருத்தினர். அத்துடன் இரவு நேரத்தில் கள் விற்கும் பெண்கள் தங்கியிருந்த வீட்டின் கண், கள்ளிற்கு விலையாகக் கொடுப்பதற்குக் கைப்பொருள் எதுவும் இல்லாமையால், தன் மனையிடத்து உள்ள காட்டு யானையின் வெண்ணிறக் கொம்பினைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தன் புதல்வனிடத்து எடுத்து வரும்படி அம்பலத்து ஆடித்திரியும் புல்லிய தலையினையுடைய மகனை அழைத்துக் கூறுவதைச்,

“செல்சாத்து எறியும் பண்இல் வாழ்க்கை
வல்வில் இளையர் தலைவர், எல்லுற
வரிகிளர் பணைத்தோள், வயிறணி திதலை,
அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பில்,
மகிழ் நொடை பெறாஅ ராகி நனைகவுள்
கான யானை வெண்கோடு சுட்டி,
மன்று ஓடு புதல்வன் புன்தலை நீவும்” (அகம்.245 : 6-12)

என்னும் பாடலடிகளால் அறிய முடிகிறது.

பாலை நிலத்தில் ஆண்கள் வேட்டையாடுதல், வழிப்பறி செய்தல், பசுக்களைத் திருடுதல், ஆகிய தொழில்களை மேற்கொண்டதோடு அதனைப் பங்கீடு செய்தும் கொண்டனர். இவை அனைத்தும் பாலை நில மக்களின் பொருளியல் சார்ந்த வாழ்வியல் முறையாகக் காணப்படுவதை அறிய முடிகிறது.

**சங்க காலச் சமூகமும் பொருள் தேடலும்**

தனிமனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவை உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம், இவற்றைத் தேடிதான் பெற வேண்டியிருந்தது. அதுபோல் சமூக இயக்கத்திற்கு அடிப்படையானது பொருளாகும். இப்பொருள் நிலை சங்க காலத்தில் பொதுப்பொருள் நிலை, தனி;ப்பொருள் நிலை என இரண்டாகப் பகுக்கப்பட்டிருந்தது. பொதுப் பொருள் என்பது அரசன் தேடுவது, தனிப்பொருள் என்பது குடும்பத்தின் பொருள் எனப்படுவது இத்தனிப்பொருளைச் சங்க காலத்தில் தலைவன், பாணன், கூத்தன், பொருநன் போன்றோர் தேடியிருக்கின்றனர். இங்குப் பொருளீட்டல், வாணிபம் செய்தல் என்ற இரு சொற்கள் ஒன்று போல் தோன்றினாலும் அதில் நுட்பமான வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்கள் தங்களின் இன்ப வாழ்க்கையாக மட்டும் பொருள் சேர்க்காமல் மறுமை வாழ்க்கைக்கும் இன்பம் தரக்கூடிய ஈதல் சிறப்பாக நடைபெறப் பொருள் தேடச் சென்றிருந்ததைக் காண முடிகிறது. முன்னோர் தேடி வைத்த பொருளைச் செலவு செய்யாமல், தன் முயற்சியால் பொருள் தேடிச் செலவு செய்தல் குடும்பத் தலைவனுக்குக் கடமையாக இருந்தைக் காண முடிகிறது

**துணைநூற்பட்டியல்**

1. பழங்காலத் தமிழர் வாணிகம், மயிலை சீனி.வேங்கடசாமி

2.பழந்தமிழிலக்கியத்தில் பொருளியல் கூறுகள், நா.பாலுசாமி,

3, பண்டைத்தமிழர் இன்பியல் வாழ்க்கை, தி.சு.பாலசுந்தரனார்

4. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையில்

5. ந.மு.வேங்கடசாமி நாடார் (உ.ஆ) சிலப்பதிகாரம், காடுகாண்காதை,